## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

### 14th டிசம்பர் / December 2024 ஞா யிறு ஆராதனை

**ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. மெர்சி நோயல்**
Call to Worship — Mrs. Mercy Noel

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. மெர்சி நோயல்**
Prayer — Mrs. Mercy Noel

### மூன்றாம் ஞாயிறு: Lighting of Advent 3rd Candle
### மகிழ்ச்சி பிரகடனம்
### Proclamation of Joy

**லூக்கா 1:32-33**

***32. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்.***
***33. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான்.***

**இரண்டு ஊதா மற்றும் ஒரு இளஞ்சிவப்பு நிற மெழுகுவர்த்தியை கொழுத்தவும்** *(Light up two purple candles and one pink candle):* — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Rev. Vijay Joseph

**அந்நேரத்தில் சொல்ல வேண்டியது:** — **திருமதி. மெர்சி நோயல்**
Mrs. Mercy Noel

**நம்பிக்கை மற்றும் சமாதானத்தை குறிக்கும் இரண்டு மெழுகுவர்த்திகளோடு மகிழ்ச்சியை குறிக்கம் மெழுகுவர்த்தியை இன்று கொழுத்துகிறோம். நம் இருதயம் அவருடைய வருகையின் மகிழ்ச்சியில் என்றும் நிலைத்திருக்கட்டும்.**

**ஜெபம்: பிதாவே, உம்முடைய குமாரனின் மூலம் வருகிற நம்பிக்கை மற்றும் சமாதானத்தினால் கிடைக்கப் பெறுகிற மகிழ்ச்சிக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த மகிழ்ச்சியின் காரணராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை பரைசாற்ற கிருபைபுரியும். இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் வல்ல பிதாவே. ஆமேன்விசுவாசிக்கிறோம். உம்முடைய வருகைக்கு வழியை ஆயத்தப்படுத்துகிறவர்களாக எங்களையும் பயன்படுத்தும். சமாதானப் பிரபுவாகிய இயேசுவின் இணையற்ற நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் வல்ல பிதாவே. ஆமேன்.**

**தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### ராஜன் தாவீதூரிலுள்ள

*1. ராஜன் தாவீதூரிலுள்ள*
*மாட்டுக் கொட்டில் ஒன்றிலே*
*கன்னி மாதா பாலன் தன்னை*
*முன்னணையில் வைத்தாரே.*
*மாதா, மரியம்மாள்தான்;*
*பாலன், இயேசு கிறிஸ்துதான்.*

*2. வானம் விட்டுப் பூமி வந்தார்*
*மா கர்த்தாதி கர்த்தரே;*
*அவர் வீடோ மாட்டுக் கொட்டில்,*
*தொட்டிலோ முன்னணையே*
*ஏழையோடு ஏழையாய்*
*வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்.*

*3. ஏழையான மாதாவுக்கு*
*பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;*
*பாலிய பருவம் எல்லாம் அன்பாய்*
*பெற்றோர்க்கு அடங்கினார்.*
*அவர்போல் கீழ்ப்படிவோம்,*
*சாந்தத்தோடு நடப்போம்.*

*4. பாலர்க்கேற்ற பாதை காட்ட*
*பாலனாக வளர்ந்தார்,*
*பலவீன மாந்தன்போல*
*துன்பம் துக்கம் சகித்தார்.*
*இன்ப துன்ப நாளிலும்*
*துணைசெய்வார் நமக்கும்*

**மாறி மாறி வாசித்தல்** *50ம்* **ஞாயிறு** *“சங்கீதம் 145”* — **சபையார் இணைந்து**
Congregation

“கர்த்தர் உண்மை உள்ளவர்”

Psalter Reading “Psalm 145”

**தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**

Lord's Prayer | Congregation

✝ **காணிக்கை பாடல்** | **சபையார் இணைந்து**
Offertory Song | Congregation

**<u>பெத்தலையில் பிறந்தவரைப்</u>**

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித்துதி, மனமே – இன்னும்

*1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் இங்கு*
*தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார்,*

*2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் இங்கு*
*பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார்.*

*3 முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக இங்கு*
*மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே,*

*4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் இங்கு*
*ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார்.*

*5. இத்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை நாம்*
*எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** | **சபையார் இணைந்து**
Doxology | Congregation

✝ **திருமறைப் பாடம்** | **மிஸ். ஜுவானிடா எம்மா**
***ஏசாயா 59 : 16 – 21*** | Miss. Juanita Emma
Scripture Reading
Isaiah 59 : 16 – 21

**அருளுரை** | **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon | Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** | **சபையார் இணைந்து**
Offertory & Closing Song | Congregation

<u>ஆர் இவர் ஆராரோ</u>

**ஆர் இவர் ஆராரோ இந்த அவனியோர் மாதிடமே**
**ஆனடை குடிலிடை மோனமாய் உதித்த இவ்வற்புத பாலகனார்?**

*1. பாருருவாகுமுன்னே இருந்த பரப் பொருள் தானிவரோ?*
*சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ் சிருட்டித்த மாவலரோ?*

*2. மேசியா இவர்தானோ? நம்மை மேய்த்திடும் நரர்கோனோ?*
*ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி அன்புள்ள மனசானோ?*

*3. தித்திக்குந் தீங்கனியோ? நமது தேவனின் கண்மணியோ?*
*மெத்தவே உலகிருள் நீக்கிடும் அதிசயமேவிய விண்ணொளியோ ?*

*4. பட்டத்துத் துரைமகனோ? நம்மைப் பண்புடன் ஆள்பவனோ?*
*கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக் காட்டிடுந் தாயகனோ?*

*5. ஜீவனின் அப்பமோதான்? தாகம் தீர்த்திடும் பானமோதான்?*
*ஆவலாய் ஏழைகள் அடைந்திடும் அடைக்கலமானவர் இவர்தானோ?*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **<u>மனப்பாட வசனங்கள்</u>** | **சபையார் இணைந்து**
<u>Memory Verses</u> | Congregation

***யோவான் 1:14***
John 1:14

***14. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** | **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction | Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **⁄ Indicates Congregation standing**